பெயர் : **தமிழ் பயிற்சித்தாள்** **தேதி: 3.11.22**

வகுப்பு : 4 **இலக்கணம் - காலம், வாசித்தல்**

## I. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:

இந்திய விடுதலைக்காக போராடிய தியாகிகளுள் ஒருவர் குமாரசாமி. இவரது பெற்றோர் நாச்சிமுத்து - கருப்பாயி ஆவார். இவரது ஊர் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சென்னிமலை ஆகும். இவர் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். குடும்ப வறுமை காரணமாகப் படிப்பைத் தொடரவில்லை. காந்தியடிகளின் அறப்போராட்டம் இவரை ஈர்த்தது.

1. குமாரசாமியின் பெற்றோர் யாவர்?
2. குமாரசாமியின் ஊர்ப் பெயர்________________
3. குமாரசாமியை ஈர்த்தது எது?
4. குமாரசாமி எதன் காரணமாகப் படிப்பைத் தொடரவில்லை?

## II. பத்தியைப் படித்து விடையளி:

பெரியாரின் இயற்பெயர் இராமசாமி. இவர் வேங்கடப்பர் - சின்னத்தாயம்மாளுக்கு மகனாக ஈரோட்டில் பிறந்தார். இளமையிலேயே பெரியார், மகாத்மா காந்தியின் தொண்டரானார். கதர் அணிய வேண்டும் என்று பரப்புரை செய்தார்.அதுமட்டுமன்றி தனது தோளில் கதர் துணியைச் சுமந்து விற்றார். பிறரை மதித்தல் வேண்டும், அது மரியாதை. தன்னைத் தானே மதிப்பதும்,தன் மரியாதையைத் தக்க வைத்துக் கொள்வதும் சுயமரியாதை என்றார் பெரியார். அவர்

மரியாதையையும் - சுயமரியாதையும் தமது இரு கண்களாகக் கருதினார்.

வினாக்கள்:

5. பெரியாரின் இயற்பெயர் என்ன?

6. இளமையிலேயே பெரியார், யாருடைய தொண்டரானார்?

7. பெரியார் தமது இரு கண்களாகக் கருதியவை எவை?

8. பெரியார் பிறந்த ஊர் __________ .

9. பெரியார் எதை தனது தோளில் சுமந்து சென்று விற்றார்?

III. **சொல் அமைக்க**:

10. கருத்துகள் = கருத்து, துகள், கருது, கரு.

11. விளையாட்டு =

12. பூங்கொத்து =

13. கண்காட்சி =

14. வரிக்குதிரை =

15. தூத்துக்குடி =

16. பள்ளிக்கூடம் =

IV. **நிரப்புக**:

17. காலம் ____________ வகைப்படும்.

18. நான் படித்தேன் என்பதன் எதிர்காலம் ____________________

19. இறந்தகாலத்தின் வேறு பெயர் _______________ .

20. ஒரு செயல் நடந்துகொண்டிருப்பதைக் குறிப்பது _________________ காலம்.

21. நேற்று மழை பெய்தது என்பது __________ காலம்.

22. எதிர்காலத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு ____________ .

V. **பின்வரும் சொற்களை வகைப்படுத்துக**.

23. எழுந்தான், படிக்கிறாள், வருவார், ஓடினான், பாடுவேன், உண்கிறான், தேடுவார், நடிக்கின்றான், கற்றாள்.

| இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |